வகையில் செலவுப் பொறுப்புகளைச் சரிக்கட்ட ரூ. 33 கோடி கூடுதலாக ஒதுக்க வேண்டியிருந்தது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு மாநில நிலவள வங்கி ஆகியவற்றின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்தும் வகையில், அவை அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் ரூ. 17.37 கோடி பங்கு மூலதனமாக மாற்றியமைக்கப்பட்டது. அரசுப் பணியாளர்களின் வீடு கட்டுவதற்கான முன்பணத் தேவைகளைக் கருத்தில் கொண்டு கூடுதலாக ரூ. 6.39 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திற்குக் (HUDCO) கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்காக அந்த இணையத்திற்கு ரூ. 6.33 கோடி வழங்க அனுமதி வழங்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளின் கீழ் தேவைப்படக் கூடிய கூடுதல் நிதி ஒதுக்கம் குறித்த விவரங்கள் அவையில் வைக்கப்பட்டுள்ளன. இதில் கோரப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளித்து அரசுக்கு தேவையான நிதி ஒதுக்கத்தை வழங்க வேண்டுமென இந்த அவையை வேண்டி அமர்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-00)

4. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(ஆ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1988-89ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்புகிற உறுப்பினர்கள் அவற்றைப் பேரவையின் 190-வது விதிக்கு இணங்க, 29–3–1989 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் செயலகத்தில் கொடுக்க வேண்டும்.

6. அரசினர் சட்டமுன்வடிவு.

நிதி ஒதுக்கச் (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, 3 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

7. வரவு-செலவுத் திட்டம், 1989-90—பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1989–90ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்மீது இந்த அவையிலே என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்கும் முன் நான் என்னை இந்தச் சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய முதுகுளத்தூர் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையிலே நான் பேசுவதற்குரிய அரிய வாய்ப்பினை உருவாக்கித் தந்த என்னுடைய கழகத்தினுடைய தலைவர் என் இதயவேந்தன் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய தினம் நிதிநிலை அறிக்கையிலே காணப்படுகிற பல திட்டங்களை தமிழகத்திலுள்ள எல்லாத் தரப்பு மக்களும் ஒருமித்த கருத்தோடு வரவேற்றுப் பாராட்டியிருக்கிறார்கள். இந்தத் தமிழகத்தினுடைய பல ஆண்டுக்கால வரலாற்றைப் பார்க்கின்றபோது இந்த அளவுக்கு அனைத்துப் பகுதி மக்களுடைய பாராட்டுக்குரிய ஒரு வரவு-செலவுத் திட்ட அறிக்கையை நான் இதுவரையில் கண்டதில்லை; இந்தச் சபையின் வரலாற்றிலேயே அவ்வாறில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.